முத்திரை

(கார் காலம், **2024**)

"

.

Shakespeare's Desk

படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க :

தங்கள் படைப்புகளைத் தாளில் எழுதி அனுப்ப வேண்டாம். எந்தப் படைப்பானாலும், அதைக் கணினியில் **MS-Word "ஒருங்குறி - லதா"அல்லது "ஒருங்குறி - நிர்மலா"(Unicode - Latha or Unicode – Nirmala)** என்ற எழுத்து வடிவில் தட்டச்சு செய்யவும், படைப்புகளை எழுதி அனுப்பும் போது, பிழைகளை நீக்கி, சரி பார்த்து அனுப்பவும். ஒற்றெழுத்துக்களை வேண்டிய இடத்தில் சேர்த்துச் சந்திப்பிழை, இல்லாமல் அனுப்பவும். ஒவ்வொரு வாக்கியத்திலும், நிறுத்தற்குறி, அரைப்புள்ளி, காற்புள்ளி போன்றவைகளை நீங்களே இட்டுச் சரி செய்யவும். **90805 51905 / 87542 24076** வாட்சப் எண்களுக்கு அனுப்பவும்.

மின்னஞ்சல் : **rameshzillion@hotmail.com**

தயவு செய்து பிடிஎஃப் (pdf) வடிவில் படைப்புகளை அனுப்ப வேண்டாம்.

Disclaimer :

***Muththirai* (*kaar kaalam*) Web magazine issue, Winter issue 2024.**

[meant for private circulation only.]

தொடர்புக்கு :

ஆசிரியர்

"ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்"

எண் **33** தெற்கு ரத வீதி

ஸ்ரீவில்லிபுத்தூர் அ. கு. **626 125**

விருதுநகர் மாவட்டம்.

அலை பேசி : (வாட்சப்) **90805 51905 / 87542 24076**

மின்னஞ்சல் : **rameshzillion@hotmail.com**

ஆசிரியனின் மேசையிலிருந்து..... 

அன்புள்ள வாசக நெஞ்சங்களே,

வணக்கம். உங்கள் வீட்டில் அனைவரும் நலமா ?

எமது அடுத்த “முத்திரை” இதழ் தங்கள் கைகளில் தவழ்கிறது. இந்த இதழில் பல புதிய படைப்புகள் வெளி வந்துள்ளன. வாசியுங்கள். தங்கள் கருத்துக்களைத் தெரிவியுங்கள்.

விருப்பத்தோடு அனுப்புகிறோம் !! வாசிப்போர் வாசிக்கட்டும்.

கடை விரித்தோம்...! கொள்பவர் கொள்க !!

வாழிய செந்தமிழ்...!! வாழ்க நற்றமிழர் !!!

வாழிய பாரத மணித்திருநாடு !! வந்தே மாதரம் !!

மிக்க அன்புடன்,

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்

சமர்ப்பணம்.....

"இலக்கியப்புரவலர்" இலண்டன் பத்மநாப ஐயர்

அவர்களுக்கு இந்த இதழ், அன்பின் சமர்ப்பணம்.

உள்ளே....

கடவுள் இருக்கிறார்

--- **சக்தி மகேஸ்வரி**, **இராஜபாளையம்**

இப்படியெல்லாம் நடக்கும் என்று கலா கனவிலும் நினைத்துப்பார்க்கவில்லை. தன் கணவர் இறந்து விட்டார் என்பதை அறிந்து, பிரமை பிடித்தது போல் இருந்தாள்.

காண்பவர் திரும்பிப்பார்க்கும் அழகு, நல்ல நிறம், நிலவு போன்ற முகம், உயரத்திற்கேற்ற உடல் வாகு, கத்தையான கூந்தல். பத்தாம் வகுப்பு வரை தான் படித்தாள். தீப்பெட்டி (அடிப்பெட்டி) ஒட்டுவாள். பின்னர் தையல் வகுப்பிற்குச் சென்று, சட்டை தைப்பாள். எப்போதும் சிரித்த முகம்.

அப்பா தருமர், கொத்தனார். அம்மா முத்தம்மா, காட்டு வேலைக்குப்போவாள். இரண்டு அண்ணன்கள், ஒரு அக்கா, ஒரு தம்பி.

மூத்த அண்ணன் வீட்டில் சண்டை போட்டு, ஊரை விட்டே போய் விட்டார். தேடித் தேடிப்பார்த்து விட்டு களைத்தே போய் விட்டார்கள். பாவம், அந்த அத்தை,. சோதிடம், கிளி சோதிடம், கைரேகை பார்த்து ஓய்ந்து போய் விட்டார்கள்.

இளைய அண்ணன் ரமேஷ் கொத்தனார் அப்பாவுடன் வேலை செய்தார். தம்பி குணாளன் படித்துக்கொண்டிருந்தான். அக்கா இலட்சுமிக்கு, சொந்த மாப்பிள்ளை கேட்டதால், சீர் செய்து கட்டிக்கொடுத்து விட்டார்கள்.

ஏதோ குடும்பம் ஓடியது. கூரை வீடு தான். எப்படியோ ஒரு வழியாக, காணாமல் போன அண்ணன் மேகநாதன் ஒரு நாள் வந்தார்.

ஊரே போய் பார்த்தது. சினிமா நடிகர் போல இருந்தார். 'இத்தனை நாளா எங்க போன?' என்று கேள்வி கேட்டார்கள். கேரளாவில் இருப்பதாகச் சொன்னார். அங்கே மீன் பிடிக்கும் தொழில் செய்து வருவதாகவும், நல்ல காசு கிடைக்கிறது என்றும் சொன்னார்.

அதன் பிறகு, வீடு கட்டினார்கள். வாழ்க்கை நல்லா ஓடியது. அவருக்கு பொண்ணு பார்த்து கட்டி வைத்தார்கள். மதினிக்கு அண்ணன் ஒருவர் இருந்தார். பல இடங்களில் கலாவைப் பெண் கேட்டு வந்தார்கள் ஆனால், அண்ணன் மனைவி அவளைக் கொடுக்க விடவில்லை. தன் அண்ணனுக்குத் தான் கொடுக்க வேண்டும். அப்போது தான் நகை போடுவேன் என்று சொல்லி விட்டாள். வேறு வழி இல்லாமல், அவள் அண்ணனுக்காக கொடுக்க சம்மதித்தார்கள். சோதிடர் ஜாதகம் சரியில்லை, கொடுக்க வேண்டாம் என்று சொல்லியும் பெற்றோர்கள் கேட்கவில்லை.

ஒரு வழியாகத் திருமணம் முடிந்தது. பத்து பவுன் நகை போட்டு, சீரெல்லாம் செய்து முடித்தார்கள்.

மாப்பிள்ளைக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்து இருந்தார்கள். குடிகாரர். கஞ்சா பழக்கம் வேறு இருந்திருக்கிறது. ஒரே பையன் என்று பெற்றோர் செல்லம் கொடுத்து கெடுத்து விட்டார்கள்.

காவலாளி வேலை, துணிக்கடையில் வேலை என்று ஒரு இடத்தில் உருப்படியாக வேலை செய்யாமல் இருந்தார். இரவு வெகு நேரம் கழித்து வருவது - அதுவும்- போதையில் வருவது – என வாழ்கை ஓடியது கலாவுக்கு.

மனைவியிடம் ஆசாபாசம் இல்லாத ஒரு வாழ்க்கை. எப்படியோ ஒரு குழந்தைக்கு தாயானாள் கலா. பையன் அழகாக இருந்தான். இருந்தாலும் அப்பா திருந்தவில்லை. உடல் நிலை பாதிக்கப்பட்டு, பல இடங்களில் மயங்கி விழுந்துள்ளார். மருத்துவமனைக்கு சென்று காட்டியுள்ளார்கள். மருத்துவர் பழையபடி வால்வு வீக்காக உள்ளது. மது குடிக்கக்கூடாது. போதைப்பழக்கம் கூடாது என்று சொல்லி அனுப்பி இருக்கிறார்கள். ஆனால், அவர் கேட்பதாக இல்லை.

'எதையும் சொல்வதைக் கேட்க மாட்டேங்கிறார். நான் ஊருக்குப்போறேன்' என்று கலா சொல்லி விட்டு, பையனைக் கூட்டிக்கொண்டு, அம்மா ஊருக்கு வந்து விட்டாள்.

திடீரென்று தகவல் வருகிறது, கலாவின் மாப்பிள்ளை இறந்து விட்டார் என்று.

கல்யாண வீட்டிற்குப் போனாராம். இரவு போதையில் மயங்கி விழுந்து விட்டார் என்றும், மருத்துவமனை சென்று காட்டிய போது இறந்து விட்டார் என்றார்களாம். கலா தனது ஐந்து வயது மகனைக் கட்டிக்கொண்டு அழுதாள். காரியங்கள் எல்லாம் முடிந்தது. கொண்டு போன பத்து பவுன் நகையையும் குடித்தே அழித்து விட்டான் பாவி.

மகனைக் கூட்டிகொண்டு வெறும் ஆளாக, அம்மா ஊராகிய செவல்குளம் வந்தாள் கலா. தன் மகனுக்காக உயிர் வாழ வேண்டும் என்ற வைராக்கியம் மட்டும் இருந்தது. எப்படியாவது தன் மகனை வளர்த்துப் பெரிய ஆளாக்க வேண்டும் என்ற உறுதி இருந்தது.

பல இடங்களில் இருந்தும் இரண்டாம் தாரமாகக் கேட்டு வந்தார்கள். ஆனால், கலா சம்மதிக்கவில்லை. மகனை விட்டுப்பிரிய மனமில்லை. அவ்வளவு பாசம் மகனிடம்.

அப்பா, அம்மாவோடு இருந்தாள். தையல் வேலை செய்வாள். தீப்பெட்டி ஒட்டுவாள். நல்லா சாமியும் கும்பிடுவாள். தவறாது கோவிலுக்குச் செல்வாள்.

“படுத்தால் பாயும் பகையாகும்.
நடந்தால் நாடும் உறவாகும்.”

என்ற பழமொழிக்கேற்ப சும்மாயிருக்காமல், மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கொடுத்து இருந்தாள்.

சில ஆண்டுகள் கழித்து, தபால் வீடு தேடி வந்தது. சத்துணவில் ஆசிரியை வேலைக்கு உத்தரவாகியிருந்தது.

இன்று யாரிடமும் கையேந்தாமல், வேலை பார்த்து தன் மகனைப்படிக்க வைத்து, வேலைக்கு அனுப்பி விட்டாள் கலா. உண்மையாகவும், நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் இருந்தால், எல்லாம் கிடைக்கும். கடவுளின் அருளும் கிடைக்கும். கலாவிற்கு எல்லாம் கிடைக்கிறது. பெற்றோர்களோடு, மகனோடு, அமைதியாக, ஆனந்தமாக வாழக்கை வாழுகிறாள்.

ஆம் ! ஆச்சாரக்கோவை சொல்கிறது.

பிறப்பு நெடுவாழ்க்கை வனப்பு செல்வம்
நிலக்கிழமை மீக்கூற்றம் பிணிஇன்மை கல்வி
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துவர் என்றும்
ஒழுக்கம் பிழை யாதவர்.

ஒழுக்கத்தோடு இருப்பவர்களுக்கு எல்லாம் கிடைக்கும் என்று நம் முன்னோர்கள் சொன்னது உண்மை தானே !

முரண்டு (**மொழிபெயர்ப்புக்கவிதை**)

இறந்தவர்கள்
பிடிவாதக்காரர்கள்.
கங்கை நீர் வாயில் விட்டாலும்,
விழுங்க மாட்டார்கள்.
நாம்
சுவரில் தலை முட்டி உடைத்துக் கொண்டாலும்,
அவர்கள் பொருட்படுத்துவதில்லை.
அவர்களின் மடக்கிய விரல்களை
உடைக்காமல் பிரிக்க முடியாது நம்மால்.
மண்ணால் விழுங்கப்படுகையில்,
தீ எரிந்து ஏறுகையில்,
சற்று முகம் சுளிப்பது கூட இல்லை.
அவர்கள் செய்ய மாட்டோம் என்று முடிவெடுத்தால்
முடிவெடுத்தது தான்.

--- **மலையாளக் கவிஞர் கல்பற்ற நாராயணன்**

ஆ. மு. சீனியம்மாள்   தமிழ்ப்பித்தனின் படைப்புகள்

செய்வினை

வைத்துத்தான் பாருங்களேன்,

உங்கள் செய்வினை தலை கொய்யுமா ?

தர்மம் புரிவதைத்தான் தடை செய்யுமா ?

ஓடும் நதிக்கு தெரியும் ஓய்வெடுக்குமிடம்.

வீசும் காற்றுக்குத் தெரியும், விரைவாய்ச் சேருமிடம்.

எனக்கான பங்கு என்ன என்பது

இயற்கைக்குத் தெரிய,

இங்குங்கள் செய்வினைகள்

எங்கென்னை என் செய்யும் ?

--- **ஆ. மு. சீனியம்மாள்**, **புனல்வேலி**

விரைவு

மண் பானைகளை மயானமனுப்பியதால்,

விரைவாய்ச் சோறு விருந்துகளில்,

உமிழ் நீரை உதாசீனப்படுத்தி விட்டு

ஒரு நொடியில் உண்டு விட்டோம்,

குறித்த நேரத்தைக் குறிப்பில் கொண்டதால்

விரைவுப் பேருந்து விபத்துகளில் சிக்கி,

இப்படி மறைவுக்கு இடமளிக்கவோ,

விரைவுக்கு விருந்து வைத்தோம் !

--- ஆ. மு. சீனியம்மாள், புனல்வேலி

காலம் மாறிப்போச்சு

இமய வரம்பில் மீன் கொடி ஏற்றிய

இனிய காலமல்ல.

சமயத்துக்கோர் சங்கம் அமைத்து,

கண்ட கண்ட கொடியேற்றும் காலம்,

பேகன் மயிலுக்கு போர்வை

போர்த்திய காலமல்ல,

மயில் கறி தின்னும் காலம்.

போர்களைத் தடை செய்ய சமரசம்

செய்த காலமல்ல.,

போ(மூ)ர்க்குணத்தில் புதையுறும் காலம்.

நல்லதோர் தீர்வுக்கான வாதம் புரிந்த காலமல்ல,

அடியாரா, பெரியாரா என அடி தடி வரை

கொண்டு செல்லும் காலம்.

என்ன செய்வது ?

படித்த திமிரில் காலத்தை

மாற்றிய நாமே கதைக்கிறோம்.....

காலம் மாறிப்போச்சு என்று !

--- ஆ. மு. சீனியம்மாள், புனல்வேலி

மனிதர்கள்

விரலென்றால் பத்து என்றும்,

கை, கால், செவி, கண்

என்றால் இரண்டு என்றும்,

ஓட்டையென்றால் ஒன்பது என்றும்,

சேட்டையென்றால் கணக்கிலடங்காது ,

மனிதனுக்கு மனிதர்கள்,

பாரமாக மட்டுமல்ல,

பாடமாகவும் தான்.

திருவாசகமும், திருக்குறளும் தன்

திருக்கதவு திறந்த போதும்,

ஒரு நாளும் உணரவில்லை.

ஒருவருக்கும் உதவவில்லை,

மனிதர்கள், நடமாடும் புத்தகங்கள்,

படிக்கக் கூடியவர்கள், கிழிக்கக்கூடியவராய்,

பார் முழுதும் தத்துவங்களை

உதிர்ப்பான். பின் அவனே எதிர்ப்பான்,

பிரம்மனே அதிசயிக்கும் பெரும் அதிசயம்

மானிட வர்க்கம்,

ஒவ்வொருவரையும், ஒவ்வொரு நாளும்

ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை

உணர்ந்து படிக்க உயர்ந்து காண்பார்

உலகியல் மனிதர்.

--- ஆ. மு. சீனியம்மாள், புனல்வேலி

குறைகள்

யாருக்கில்லை குறை ?

கோடிஉறவுகள் கூடிக்குலவினாலும்,

வாடி நிற்கையில் ஓடி வந்து கேட்போரில்லை,

ஆரோக்யமான உடலிருந்தாலும்,

அடுத்த வேளை உணவுக்கு அடுத்தவரை நாடுகிறார்.

மகிழுந்துகள் (கார்) ஏழெட்டு இருந்தாலும்,

மாடியிலே வசித்தாலும், கோடியிலே புரண்டாலும்,

மகிழ்வுக்கு குறை.

ஆலயங்களில், ஆண்டவனுக்கும்,

அம்மைக்கும் கூட, ஆண்டுக்கொரு முறையே !

வித விதமாய்ப் படையல்,

ஒளியிலே சில கோயில்கள்,

இருளிலே சில கோயில்கள் என,

வழியிலே பார்த்தாலும், வழக்கம் போல்

வணக்கம் செய்தோம்,

இருப்போர்க்கு இருக்கிறதென்ற குறை,

இல்லையென்போர்க்கு இல்லையெனும் குறை,

உன்னைக்கேட்டு, என்னைக் கேட்டு

எதுவும் நடக்குமா ?

அந்த ஒருவன் நடத்தும் நாடகத்தை

நிறுத்த முடியுமா ?

கருத்தாழமிக்க கண்ணதாசன் வரிகள்,

முகவாட்டத்துக்கு முற்றுப்புள்ளி வை,

சுகம் பல உண்டு சூழப்பார்,

உறுப்பில்லாதவர்களே

உறுதியுடன் வாழும் போது,

பொறுப்பில்லாமல் நாம் மட்டும் தான்

அது இல்லை, இது இல்லை எனும் குறையோடு,

குறையெல்லாம் குன்றிப்போகும்,

நிறைவெல்லாம் நிறைவேறும்,

சித்தர் அருளால் செயமாகும்,

புத்தி குழம்பாமல் பொழுதைக் கழிப்போம்

சித்தியாகும் சிறு குறைகள்.

சிறகு விரிக்கும்!

******* ஆ. மு. சீனியம்மாள் தமிழ்ப்பித்தன்

நரகத்து வாழ்க்கை

என்னது, பழைய சோறா ?

சிக்கனும், பிரைட் ரைசும் இருக்கையில்.

என்னது, இளநீர், மோரா?

விஸ்கியும், பிராந்தியும் வீடு தேடி வருகையில்.

என்னது நடக்கவா ?,

ஆடிக்காரும், அம்பாசிடரும்

அணி வகுத்து நிற்கையில்.

என்னது பட்டிமன்றமா ?

கேபரே நடனமும், ரெக்கார்ட் டான்சும் இருக்கையில்.

என்னது, கிராமத்துக்கு வரவா ?

ஓசி நோயையும், ஏசி காற்றையும் விட்டு விட்டு.

என்னது பசிச்சா சாப்பிடணுமா ?

கெடைக்கும் போதே அடைக்கணும் பாசு !

சுத்த பட்டிக்காட்டான்.

வேடிக்கையாய்ச் சொன்னவன் தான்,

இன்று திடீரென.....

என்னது ?

அதிர்ந்தேன் நான்

ஹார்ட் அட்டாக் என்றதும்.

---- ஆ.மு. சீனியம்மா தமிழ்ப்பித்தன்

சுப்ரபாதம்

படுக்கையை விட்டு காலையிலெழுந்து,

பின் மீண்டும் படுக்கைக்குத் திரும்புகையில்,

அன்று நடந்ததை ஆய்வு செய்த போது,

அப்படியொன்றும் பெரிதாய்க் கிழிக்கவில்லை,

நாட்காட்டியிலுள்ள நேற்றைய தாளைத் தவிர,

என்றென்னைக் கடிந்து கொண்டாலும்,

மறக்காமல், படுக்கையில் உடல் சாய்க்கையில்

நன்றி மட்டும் நான் சொல்லத் தவறியதில்லை,

எனைச்சுமக்கும் பூமி மாதாவுக்கு!

இனிய இரவு வணக்கம் !!

-- ஆ. மு. சீனியம்மாள் தமிழ்ப்பித்தன்

விடுதலை

யார் சொன்னது சுதந்திர நாடென்று ?,

மூவர்ணக்கொடி முத்தாய்ப்பாய்ப்

பறக்குதென்று குதிக்காதீர்,

அடைபட்டுக் கிடந்தவை

அன்று பறக்கிறது அவ்வளவு தான்,

அதற்காக குடியரசு, சுதந்திர தினம் என

கூப்பாடு போடாதீர். எப்பாடு பட்டார் ?

எவ்வளவு இன்னலுற்றார் ? எண்ணினோமோ

எள்ளளவு சிந்திப்போம்.

சீரழிக்கும் குடியை சீரழிக்காமல் சிறப்பில்லை.

சீரிய குடியில்லை.

மது ஒழிந்ததென்று, மதி தெளிந்ததென்று மார் நிமிர்த்தும் நாளே
மானிட குலத்துக்கு மாபெரும் விடுதலை நாள் !

---- ஆ. மு. சீனியம்மாள் தமிழ்ப்பித்தன்

கடமைகள்

கல்யாணம் முடித்தோரே

கடமை குறித்த கணக்கும் எழுதுங்கள்,

மாதச்சம்பளம் போதவில்லையென

பாதகச் செயலை தவிர்த்து,

வழிமுறை ஆயிரம் வாழ வகுத்தாலும்,

வலியற்ற வாழ்வை வாழப்பழகுங்கள்,

வரவு, செலவு கணக்கென்பது வருமானம் குறித்தல்ல,

பாவ, புண்ணிய கணக்கும் தான்,

கடமை என்பது நாளைய தேவைக்கு.

இன்று சேர்ப்பதல்ல.

ஏனைய உயிர் வாழ, ஏதோ நம்மாலானது,

கடமைக் கணக்கையும் கட்டாயம் எழுதுங்கள்,

கடன் ஆயிரமே பட்டாலும்

உடன் வருவது உவந்து செய்த தர்மமே,

கர்மக் கணக்கோடு கால தேவன் வாழ்த்தும்

தர்மக் கணக்கையும் கடமையாக எழுதுங்கள்,

வீழ்த்தும் பகை வீழ்ந்து விடும்.

வாழ்த்தும் உள்ளம் வந்து விடும் !

---- ஆ. மு. சீனியம்மாள் தமிழ்ப்பித்தன்

எலும்புகளைத் தேய விடாமல்,

இயந்திரங்கள் வந்து காப்பாற்றி விட்டது.

ஆனாலும், வலுவுக்கோர் மாத்திரை,

வாய்வுக்கோர் மாத்திரை,

வலிக்கோர் மாத்திரை

வாந்திக்கோர் மாத்திரை,

வயிற்று வலிக்கும் மாத்திரை,

வயிற்றுப் போக்குக்கும் மாத்திரை,

வந்த நோய் யாவற்றுக்கும்,

இந்த மாத்திரையா இறுதித் தீர்வு ?

மூலை முடுக்கெல்லாம்

மூலிகை கண்டு, அதன்

வேலை என்னவென்பதை எப்போதுணர்வோம் !

---- ஆ. மு. சீனியம்மாள் தமிழ்ப்பித்தன்

நான் நானாக இல்லாததால்.....

****

காவல் நிலைய நீதிமன்றக் கதவுகள்

இன்னும் அடைக்கப்படாமல்,

நெடுஞ்சாலைகள்,

இன்று வரை கொடுஞ்சாலைகளாய்

மயானங்களில், தியானங்களுக்கும் தீ மூட்டப்பட்டு,

மதுக்கடை விற்பனை அமோகமாக்கப்பட்டு,

மருத்துவமனையின் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு,

மாத்திரைகளும், மருந்துகளும் மார் நிமிர்த்தி வரப்பட்டு,

கொள்ளையர் கூடங்களுக்கே,

தினம், தினம் திறப்பு விழா நடத்தப்பட்டு,


பள்ளிகளும், கல்லூரிகளும்

பாடம் ஆயிரம் நடத்தினும்,

படிப்பின் மீது பிடிப்பில்லையெனில்,

எப்படி இருக்க முடியும் நான் நானாக......

******** ஆ. மு. சீனியம்மாள் தமிழ்ப்பித்தன்


'வள்ளுவர் ஓர் இந்து'
விஸ்வ
ஹிந்து மையம்
கேந்திரம்
கவியரசு கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதம் நூலில் 'வள்ளுவர் ஓர் இந்து' என்று திருக்குறளை மேற்கோள் காட்டி தனி அத்தியாயமே எழுதியிருக்கிறார் கண்ணதாசன்! 'இறைவன்' என்ற சொல் 'கடவுள்' என்ற பொருளில் வள்ளுவனால் இரண்டு இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. ஐந்தாவது குறளில், 'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்' என்றும், பத்தாவது குறளில்,பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார்' - என்றும், அது ஆளப்படுகிறது.
கடவுளை 'இறைவன்' என்று பௌத்தர்களோ, முஸ்லீம்களோ, கிறிஸ்தவர்களோ கூறத் தொடங்குவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வள்ளுவன் கூறியிருக்கிறான். மற்றவர்கள் பின்னால் எடுத்துக் கொண்டார்கள்.
- கவிஞர் கண்ணதாசன்


DINAMALAR
Tirukural
THE AMERICAN ENGLISH TRANSLATIONS OF AN ETHICAL MASTERPIECE
In this 2,200-year-old classic the South Indian sage Tiruvalluvar tells us of friends and foes, family, God, business, law, spies, love, hate and all that's human
G.U.Pope
ஜி யு போப் புத்தகத்தில்
காவி உடை அணிந்த வள்ளுவர்
ஜி.யு.போப் மொழிபெயர்ப்பில் வெளியிடப்பட்ட திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு புத்தகத்தில் காவி உடையுடன் திருவள்ளுவர் படம் இடம்பெற்றுள்ளது.

”மதுவிலக்கு கொள்கை ஒரு காட்டுமிராண்டித்தனமான கொள்கை”



-ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்

அண்ணல் காந்தியடிகளின் மதுவிலக்கு கொள்கை ஒரு காட்டுமிராண்டித்தனமான கொள்கை என்று ஈ.வே. ராமசாமி சாடினார். இதோ அதற்கான ஆதாரம்.

“...தமிழில் பேசக்கூடாது. கையால் சாப்பிடக்கூடாது. வேட்டி, சட்டை, புடவை எல்லாம் மாற்றி, ஆங்கிலேய முறை உடை உணவு, மொழி ஆகியவற்றுக்கு மாறுதல் செய்யப்பட வேண்டும்" என்றெல்லாம் நவீனக் கருத்துக்களைப் ஈ.வே. ரா. வலியுறுத்தினார்.

" மது விலக்கு என்பது இமயமலை அளவு முட்டாள்தனம். காந்தியாரின் காட்டுமிராண்டித்தனமான கொள்கைளில் வெற்றி பெறாத ஒன்றாகும் இது. மது விலக்கால் எந்தப்பயனும் கிடையாது. இதனால் தொழிலாளரின் தேசிய சக்தி (Energy) தான் குறைந்து போய் விட்டது. காங்கிரஸ்காரர்களைக் கெடுத்துப் பதவியில் இருந்து விரட்டியது போலவே, இந்த மதுவிலக்கு இவர்களையும் கெடுத்து விரட்டி விடுமோ என்றே நான் பயப்படுகிறேன்” என்று பெரியார் ஒரு தலையங்கத்தில் அச்சந்தெரிவித்தார். பூம்புகாரில் கண்ணகிக் கோட்டம் எழுப்பும் செய்தி கேள்வியுற்று, " “பத்தினி பதிவிரதை" என்று 11 -11 -1968 ல் தலையங்கத்தின் வாயிலாகச் சீற்றம் தெரிவித்தார்

தமிழ் ஒரு காட்டுமிராண்டி பாஷை

"தமிழ் ஒரு காட்டுமிராண்டி பாஷை. தமிழில் படித்தால் முன்னேற முடியாது. அதனால்; தான் கன்னடத்துக்காரனாகிய நான் தமிழ் நாட்டில் தலைவனாக இருக்கிறேன்." --ஈ. வெ.ராமசாமி .

"திருவள்ளுவன் அந்தக்காலத்துக்கு ஏற்ற வகையில், ஆரியக்கருத்துக்கு ஆதரவு கொடுக்கும் அளவில், பகுத்தறிவைப்பற்றி கவலைப்படாமல் , நீதி கூறும் முறையில், தனது மத உணர்ச்சியோடு ஏதோ கூறிச்சென்றான்..." திருவள்ளுவனைக் குறித்து ஈ.வெ. ராமசாமி சொன்ன கருத்து

“...தொல்காப்பியன் ஒரு ஆரியக்கூலி... கம்பன் தமிழ் துரோகி, திருவள்ளுவர் மூட நம்பிக்கையைப்பரப்புவதற்காக எதையோ சொல்லி விட்டுப்போயிருக்கிறார்..

திருக்குறளில், ஏதோ மொத்தமும் 30 குறள் தான் தேறும். புலவர்கள் எல்லாம் பொய்யர்கள்...” - ஈ. வெ. ரா.

கெட்ட நாற்றம்

வள்ளுவர் குறளையும், அந்தப்படியே அப்போது பகுத்தறிவுக்கு ஏற்றதல்ல என்று கண்டித்து வந்தேன். எல்லாவற்றையும் குறை சொல்லும் போது, பலர் என்னிடம் எல்லாம் போய் விட்டால், நமக்கு எது தான் நூல்?' என்று கேட்பார்கள். நான் 'இங்கே இருக்கிற மலத்தினால் கெட்ட நாற்றம் வீசுகிறது. அதை எடுத்து விடு' என்று கூறினால், அந்த இடத்தில் என்ன வைப்பது என்றா கேட்பது?' என்று பதில் கூறுவேன்.

---'**விடுதலை**' 11-06-1950

தமிழ் காட்டுமிராண்டி மொழி

இந்த தமிழ் மொழியானது காட்டுமிராண்டி மொழி என்று நான் ஏன் சொல்கிறேன் ? எதனால் சொல்கிறேன்? என்று இன்று கோபிடித்துக்கொள்ளும் யோக்கியர்கள் ஒருவர் கூட சிந்தித்துப் பேசுவதில்லை.' வாய் இருக்கிறது. எதையாவது பேசி வயிறை வளர்ப்போம்' என்பதைத் தவிர , அறிவையோ, மானத்தையோ, ஒழுக்கத்தையோ பற்றி சிறிது கூட சிந்திக்காமலே பேசி வருகிறார்கள். இப்படிப்பட்ட இவர்கள் போக்குப்படியே சிந்தித்தால், ' தமிழ் மொழி 3000-4000 ஆண்டுகளுக்கு முந்தி ஏற்பட்ட மொழி என்பதை, தமிழின் பெருமைக்கு சாதனமாய்க்கொண்டு பேசுகிறார்கள். நானும் தமிழ் காட்டுமிராண்டி மொழி என்பதற்கு அதைத்தானே முக்கிய காரணமாய்ச்சொல்லுகிறேன்.

--‘‘**மெடீரியலிசம் அல்லது பிரகிருதிவாதம்**” **என்ற நூலில் -- ஈ. வெ.ராமசாமி.**

தமிழ் காட்டுமிராண்டி பாஷை

இந்த தமிழ் மொழியானது காட்டுமிராண்டி மொழி என்று நான் ஏன் சொல்கிறேன்? எதனால் சொல்கிறேன்? என்று இன்று கோபித்துக் கொள்ளும் யோக்கியர்கள் ஒருவர் கூட சிந்தித்துப் பேசுவதில்லை. "வாய் இருக்கிறது எதையாவது பேசி வயிறை வளர்ப்போம்' என்பதைத் தவிர, அறிவையோ, மானத்தையோ, ஒழுக்கத்தையோ பற்றி சிறிது கூட சிந்திக்காமலே பேசி வருகிறார்கள்.

இப்படிப்பட்ட இவர்கள் போக்குப்படியே சிந்தித்தாலும், "தமிழ் மொழி 3000 - 4000 ஆண்டுகளுக்கு முந்தி ஏற்பட்ட மொழி' என்பதை, தமிழின் பெருமைக்கு ஒரு சாதனமாய்க் கொண்டு பேசுகிறார்கள். நானும் தமிழ் காட்டு மிராண்டி மொழி என்பதற்கு அதைத் தானே முக்கிய காரணமாய்ச் சொல்கிறேன். அன்று இருந்த மக்களின் நிலை என்ன? அவன் சிவனாகட்டும், அகஸ்தியனாகட்டும், பாணிணியாகட்டும், மற்றும் எவன்தான் ஆகட்டும், இவன்களைப் பற்றி தெரிந்து கொள்ள உனக்கு புத்தியில்லா விட்டால், நீ தமிழைப் பற்றி பேசும் தகுதி உடையவனாவாயா?

தமிழால் என்ன நன்மை?

தமிழ் தோன்றிய 3000 - 4000 ஆண்டுகளாக இந்த நாட்டில் வாழ்ந்த தமிழினாலும், தமிழ் படித்த புலவனாலும் தமிழ் நாட்டிற்கு, தமிழ் சமுதாயத்திற்கு என்ன நன்மை? என்ன முற்போக்கு உண்டாக்கப்பட்டிருக்கிறது? இலக்கியங்களிலே, சரித்திரங்களிலே காணப்படும் எந்த புலவனால், எந்த வித்துவானால், எவன் உண்டாக்கிய இலக்கியங்களினால் இது வரை தமிழனுக்கு ஏற்படுத்தப்பட்ட, ஏற்படுத்திய நன்மை என்ன என்று கேட்கிறேன்.

தமிழறிஞர்களுக்கும் பகுத்தறிவுக்கும் வெகு தூரம்

"தமிழ் படித்த, தமிழில் புலவர்களான வித்துவான்கள் பெரிதும் 100க்கு 99 பேருக்கு ஆங்கில வாசனையே இல்லாத வித்துவான்களாக... தமிழ்ப் புலவராகவே வெகு காலம் இருக்க நேர்ந்து விட்டதால், அவர்களுக்கும் பகுத்தறிவுக்கும் வெகுதூரம் ஏற்பட்டதோடு, அவர்கள் உலகம் அறியாத பாமரர்களாகவே இருக்க வேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள். ஆகவேதான் புலவர்கள், வித்துவான்கள் என்பவர்கள் 100-க்கு 90 பேர்கள் வரை, இன்றைக்கும் அவர்களது வயிறு வளர்ப்பதற்கல்லாமல் மற்றெதற்கும் பயன்படுவதற்கு இல்லாதவர்களாகவே ஆகி விட்டார்கள்.

வேறு மொழி ஏற்பதால் கேடு என்ன?

தமிழை ஒதுக்கி விடுவதால் உனக்கு நட்டம் என்ன? வேறு மொழியை ஏற்றுக் கொள்ளுவதால் உனக்குப் பாதகம் என்ன? தமிழிலிருக்கும் பெருமை என்ன? நான் சொல்லும் ஆங்கிலத்தில் இருக்கும் சிறுமை என்ன? நமது நாட்டுக்கு கமால் பாட்சா ஆட்சி போன்ற ஒரு வீரனும் யோக்கியனுமான ஒருவன் ஆட்சி இல்லை என்பதால், பல முண்டங்கள் பல விதமாய் பேசி முடிக்கிறதே அல்லாமல், இன்று தமிழைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் யாருக்கு என்ன வந்தது என்று கேட்கிறேன்.

தொல்காப்பியன் மாபெரும் துரோகி

தொல்காப்பியன் ஆரியக் கூலி. ஆரிய தர்மத்தையே தமிழ் இலக்கணமாகச் செய்து விட்ட மாபெரும் துரோகி. திருவள்ளுவன் அக்காலத்திற்கு ஏற்ற வகையில் ஆரிய கருத்துக்கு ஆதரவு கொடுக்கும் வகையில், பகுத்தறிவைப் பற்றி கவலைப்படாமல் நீதி கூறும் வகையில், தனது மத உணர்ச்சியோடு ஏதோ கூறிச் சென்றார்.

- ஈ. வெ. ரா. எழுதிய "தமிழும் தமிழரும்' என்ற நூலிலிருந்து.

தமிழில் என்ன நல்ல கருத்து உள்ளது ?

நாட்டுக்கு "சுதந்திரம்' கிடைத்து இன்றைக்கு 20ஆவது ஆண்டு நடக்கிறது. 20 ஆண்டு சுதந்திர வாய்ப்பில் தமிழ் மக்கள் அடைந்த நிலை, "இங்கிலீஷ் வேண்டாம்; தமிழ் வேண்டும்'. இதுதானா? அய்யோ பைத்தியமே! தமிழை (பிற மொழிகளிலிருந்து மொழி

பெயர்க்கப்படாத) தமிழ் மூல நூல்களை, தனித் தமிழ் இலக்கிய நூல்களில் எதை எடுத்துக் கொண்டாலும், அவற்றிலிருந்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பதான இலக்கணப்படி அமைந்த தமிழ் "சுவை' அல்லாமல், அறிவு, பகுத்தறிவு, வாழ்க்கை அறிவு, வளர்ச்சி பெறுவதற்கான ஏதாவது ஒரு சாதனத்தை சிறு கருத்தை, பூதக் கண்ணாடி வைத்து தேடியாவது கண்டுபிடிக்க முடியுமா? கண்டுபிடித்து பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்று தமிழ் அபிமானிகளை வணக்கத்தோடு கேட்கிறேன்.

தமிழ் படித்தால் நடைப்பிணமாய் இருக்கலாம்

...தமிழ் மக்கள் என்னும் குழந்தைகளுக்கு தாய்ப்பால் என்னும் தமிழானது, முன்னேற்றம் என்னும் உடல் தேறுவதற்கோ வளர்வதற்கோ பயன்பட்டு இருக்கின்றதா? பயன்படுமா? "தாய்ப்பால் சிறந்தது' என்பதில் தாய்ப்பாலில் சக்தியும், சத்தும் இருந்தால்தான் அது சிறந்ததாகும். இங்கு தமிழ் என்னும் தாயே சத்தற்றவள் என்பதோடு, நோயாளியாகவும் இருக்கும்போது அந்தப் பாலைக் குடிக்கும் பிள்ளை உருப்படியாக முடியுமா? தாய்க்கு நல்ல உணவு இருந்தால்தானே அவளுக்கு பாலும் ஊறும்; அந்தப் பாலுக்கும் சக்தி இருக்கும்! தமிழில் நல்ல உணவு எங்கே இருக்கிறது?

இப்படிப்பட்ட இந்தத் தாய்ப் பாலைக் குடித்து வளர்ந்த பிள்ளைகள், இந்நாட்டிலேயே நடைப்பிணமாய் இருப்பதைத் தவிர, அதுவும் மற்றவன் கை காலில் நடப்பதைத் தவிர, உழைப்புக்கு - காரியத்துக்குப் பயன்படும்படியான, தன் காலால் தாராளமாய் நடக்கும்படியான பிள்ளை - ஒற்றைப் பிள்ளை தமிழ்நாட்டில் இருக்கின்றதா என்பதை அன்பர்கள் காட்டட்டுமே - என்றுதான் பரிவோடு கேட்கிறேன்.

இன்றைய தினம் கூட மேற்கண்ட தமிழ்த் தாயின் பாலை நேரே அருந்தி வளர்ந்த பிள்ளைகள், இங்கிலீஷ் புட்டிப் பாலை அருந்தி இருப்பார்களேயானால், இந்த அன்பர்கள் உட்பட எவ்வளவோ சக்தியும், திறமையும் உடையவர்களாக ஆகி, இவர்கள் வாழ்க்கை நிலையே வேறாக, அதாவது அவர்கள் நல்ல பயன் அடைபவர்களாக ஆகி இருப்பார்கள் என்பதோடு, மற்றவர்களுக்கும் பயன்படும்படியான நல்ல உரம் உள்ள உழைப்பாளிகளாகி இருப்பார்கள் என்று உறுதியோடு கூறுகிறேன்.


---- "தாய்ப் பால் பைத்தியம்' என்ற நூலிலிருந்து.

அணுவைக் கண்டறிந்த மகரிஷி கணாதர்

-- **ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்**

நமது பள்ளிக்கூட அறிவியல் புத்தகங்கள், ‘அணுக்கொள்கையை கண்டுபிடித்தவர், ஜான் டால்டன் என்ற ஆங்கிலேயர்’ என்று சொல்லுகின்றன. இவரது காலம் பொ. சகா. 1766 – 1844 ஆகும். ‘ஐரோப்பியர்கள் மட்டுமே மூளை உள்ளவர்கள். தமிழனுக்கு சிந்திக்கத்தெரியாது. தமிழ் ஒரு காட்டுமிராண்டி பாஷை’ என்றெல்லாம், நம்மை முட்டாள்களாகவே ஆக்கி வைத்துள்ளனர் இங்கு உள்ள அரசியல் இயக்கத்தவர்கள்.

இந்தியாவுக்கு சுதந்திரம் வந்த பின்னரும் , ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை விட்டுப்போகக்கூடாது என்று தங்கள் ஆங்கிலேய விசுவாசத்தைக்காட்டிய சுயமரியாதைச்சுடர்களாயிற்றே இவர்கள் ! ஆனால், சற்றொப்ப 2600 ஆண்டுகளுக்கு முன்பே, இந்த பாரத புண்ணிய பூமியில், இந்த அணுக்கொள்கையை வகுத்த ஒரு மகரிஷி இருந்தார். அவர் பெயர் கணாதர் ஆகும். ' கணாதர்' என்ற சொல்லுக்கு "அணுவை உண்பவர்’ என்று அர்த்தம்.



கணாதன் , **காசியபர்**, **உலுக்கா**, **கனந்தர்**, **கணாபுகர்** என்றும் இவர் அறியப்படுகிறார். இவரே வைசேஷிக சூத்திரம் என்ற சமய நெறியைத் தோற்றுவித்தவராகக் கருதப்படுகிறார். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மணிமேகலை பெருங்காதையில், 27--ஆவது காதையில்

குறிப்பிடப்பட்டுள்ள ஆறு வகையான சமய நெறிகளில் வைசேஷிகம் குறித்தும், கணாதர் குறித்தும் விளக்கமான செய்திகள் உள்ளன.

"பாங்குறும் உலோகாயதமே பௌத்தம்
சாங்கியம் நையாயிகம் வைசேடிகம்
மீமாஞ்சகம் ஆம் சமய ஆசிரியர்
தாம் பிருகற்பதி சினனே கபிலன்
அக்கபாதன் கணாதன் சைமினி
மெய்ப்பிரத்தியம் அனுமானம் சாத்தம்
உவமானம் அருத்தாபத்தி அபாவம்
இவையே இப்போது இயன்று உள அளவைகள்..'"

--மணிமேகலை- 27- சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை

பொ.சகா.மு. ஆறாம் நூற்றாண்டுக்கும், பொ.சகா.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்ததாக மதிப்பிடப்படும் கணாதரைக்குறித்த வாழ்க்கைக் குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை. இவரே இந்திய மெய்யியலில் அணுவைக் குறித்த கருத்தியலை நாட்டியவர். தனது வடமொழி நூலான *வைசேஷிக சூத்திரத்தில்* இது குறித்து விளக்கியுள்ளார். இவரது உரை '*கணாதர் சூத்திரங்கள்*', அல்லது 'கணாதரின் நூற்பா' எனவும் அழைக்கப்படுகின்றது.

தமது கருத்தியலில், கணாதர் அண்டத்தின் உருவாக்கலையும், இருத்தலியலையும் விளக்க முற்பட்டுள்ளார். அணுக்கொள்கை, தருக்கம், மெய்யியல் ஆகியவற்றின் மூலமாக இந்த விளக்கத்தைத்தர முயன்றுள்ளார். மெய்யியலின் கருத்தியலை மனித வரலாற்றில் முதன்முதலில் முன்மொழிந்தவர் இவரேயாகும். கணாதரின் கூற்றுப்படி எதுவும் உட்பிரிவாக பிரிக்க முடியும், ஆனால் இந்த உட்பிரிவை ஒரு கட்டத்திற்கு மேல் பிரிக்க முடியாத நிலை வரும். இவ்வாறு பிரிக்க முடியாத அளவில் உள்ளவை *பரமாணு* எனப்படும். இவை பிரிக்கப்பட முடியாதவை மட்டுமல்ல, இவை அழிக்க முடியாதவையும் கூட. இவற்றின் பல்வேறு கூட்டுப் பொருட்களே சிக்கலான பொருட்களாகும். இதுவே அனைத்து பொருட்களின் இருப்புக்கு காரணமுமாகும். இந்த கருத்தியலை இந்து சமயத்தின் ஆன்மாவிற்கும் பொருத்தி, ஆத்திகமல்லா வழியிலும் வீடுபேறு அடையும் வழியை விளக்கினார். கணாதரின் கருத்துக்கள் இந்து சமயத்தின் பல்வேறு கருத்தியல்களிலும் உள்வாங்கப்பட்டுள்ளது. வரலாற்றின்படி, இது இந்து சமயவியலில் நியாயம் குறித்ததாக அமைந்தது.

சமயத்தில் அறுவகை கருத்தியல் :

கணாதரின் ஆய்வில் ஆறு **பகுப்புகள்** (பதார்த்தாக்கள்) உள்ளன; இவை அறியக்கூடியவையும் பெயரிடப்பட்டவையுமாகும். இவற்றின் மூலமாக அண்டத்தின் அனைத்தையும், பார்வையாளர்கள் உட்பட, விவரிக்க முடியும் என்று கணாதர் கூறுகிறார்.

இந்த ஆறு பகுப்புகளாவன: திரவியம் (பொருள்), குணம் (பண்பு), கர்மன் (நகர்வு), சாமான்யம் (எங்குமுள்ளது), விசேடம் (குறிப்பிட்டவை), மற்றும் சமவாயம் (இருப்பியல்).

திரவியம் எனப்படும் பொருட்களை ஒன்பது பிரிவுகளாக பிரிக்கிறார்; இவற்றில் சில அணுவளவிலானவை, சில பெரியவை, மற்றும் வேறு சில எங்கும் நிறைந்தவை

கணாதரின் தாக்கம் இந்திய மெய்யியலில் மிகவும் குறிப்பிடத்தக்கது.
சீன இலக்கியங்களில், இவர் மரியாதையாக *சத்-லூக்கா* எனப்படுகின்றார். இவரது வைசேஷிக மெய்யியலானது, இதே போல "ஔலுக்கிய மெய்யியல்" போன்ற பல்வேறு பெயர்களில் விளங்குகின்றது. இவரது பெயரில் உள்ள 'உலுக்கா' என்பது ஆந்தையைக் குறிக்கும்; ஆந்தையைப்போல பகல் முழுவதும் ஆராய்ச்சியிலும், தியானத்திலும் ஈடுபடும் கணாதர், இரவில் ஒருமுறை மட்டுமே உண்பார் என்பது ஓர் செவிவழிச் செய்தி. கணாதரின் கருத்துக்கள் பல துறைகளிலும் பொருந்தின; மெய்யியலை மட்டுமன்றி மற்ற துறைகளிலும் இவரது தாக்கம் இருந்தது. காட்டாக, மருத்துவ நூலை இயற்றிய சரகரின் '*சரக சம்ஹிதை யிலும்* இந்தத் தாக்கத்தைக் காணலாம்

வைசேஷிக சூத்திரம் :

கணாதர், 'வைசேஷிக சூத்திர இயலின் தந்தை' எனப்போற்றப்படுகிறார். இவர், தொன்மையான இந்திய அறிவியல், மற்றும் மெய்யியல் ஆகியவற்றில் மிகுந்த தேர்ச்சி அடைந்து பல அறிவியல் கோட்பாடுகளை உண்டு பண்ணியுள்ளார். இவர், அணுக்கொள்கையை உருவாக்கி, அதன் பரிமாணம், அதன் அசைவு, அதன் வேதி வினைகள் ஆகியவற்றைக்கூறியுள்ளார்.

இவரது வைசேஷிக சூத்திரம் என்பது , விஞ்ஞானம், மெய்யியல், மற்றும் சமயம் ஆகியற்றின் ஒரு நேர்த்தியான கலவையாகும். இந்த சூத்திரங்களின் சாராம்சமே பருப்பொருட்களின் அணுக்கொள்கையாகும். ஒரு பருப்பொருளின் மேலும் சிதைவுற்ற முடியாத பொருளே அணு என்ற கருத்தை முதன் முதலாய்ச்சொன்னவர் கணாதர் ஆவார்.

அணுவைக்கண்டறிந்த கதை

கணாதர், அணுவைக்கண்டு பிடித்த சுவாரசியமான வரலாற்றைக்கொஞ்சம் காணலாம். ஒரு நாள், மகரிஷி கணாதர்,வாயில் உணவை மென்றபடியே நடை போட்டுக்கொண்டிருந்தார். அவரது வாயில் இருந்த உணவு மெதுவாக அரைபட்டுக்கொண்டிருந்தது. அந்த வாயில் இருந்த உண்மை அதற்கு மேலும் அரைக்க முடியாது என்று அவருக்குத்தோன்றியது. மேலும் அரைக்க முடியாத, பிரிக்க முடியாத அந்த துகளை அவர் அணு என்று பெயரிட்டார். அந்த அணு, இரண்டு நிலைகளை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ஒன்று, அசைவற்ற சட நிலை. மற்றொன்று அசையும் இயக்க நிலை.

கணாதர் சொன்ன அணுக்கொள்கையை பின்பற்றுபவர்கள் அணு என்பது சிதைக்க முடியாதது என்றும், அது சாஸ்வதமானது என்றும் கருதினார்கள். அணு என்பது, மிகவும் நுண்ணிய பொருள் என்றும் , அது கண்ணுக்கு தென்படாதது என்றும், ஒரு நொடியில் மறையக்கூடியது என்றும் நம்பினார்கள். அத்துடன், ஒரே பொருளின் இரு வேறு அணுக்கள் சேர்ந்து , 'த்வணுகா' ('த்வ' என்றால் இரண்டு என்று அர்த்தம்) ஆகும் என்றும், மூன்று அணுக்கள் சேர்ந்து 'த்ரை அணுகா' ('த்ரை' என்றால் மூன்று என்று அர்த்தம்) ஆகும் என்றும் கூறினார்கள். இவர்கள் வைசேஷிக மெய்யியலை சேர்ந்தவர்கள். மூலப்பொருளின் இரு வேறு அணுக்களான , த்வணுகா என்பது, அந்த மூலப்பொருளின் அதே தன்மையைக்கொண்டிருக்கும் என்றும் அவர்கள் கருதினார்கள். அணுக்களை சூடுபடுத்தினால், அவைகள் வேதி வினை புரிந்து ஒன்று சேரும் என்ற கருத்தையும் அவர்கள் முன்மொழிந்தனர். சுட்ட மண் பாண்டம்

கருப்பு நிறம் அடைவதையும், மரத்தில் கனி பழுப்பதையும் இந்த கோட்பாட்டிற்கு உதாரணங்களாக அவர்கள் முன்மொழிந்தனர்.

வேறு வேறு குணங்கள் கொண்ட பரமாணுக்களை கணாதர் கண்டறிந்தார். ஒவ்வொரு பருப்பொருளின் குணாம்சமும், அதன் ஒவ்வொரு அணுவிலும் இருக்கும் என்று அவர் கூறினார்.இந்த விசித்திரமான தன்மையே வைசேஷிக சூத்திரம் எனப்பட்டது. வேறு வேறு பருப்பொருட்களின் பரமாணுக்கள், அதன் விசித்திரமான தன்மையால் நிறைய எண்ணிக்கையில் ஒன்று சேரும் என்றும், அவ்வாறு சேர்ந்ததால், உலகில் நாம் காணும் அனைத்து பொருட்களும் உருவாகின என்றும் மகரிஷி கணாதர் கூறினார்.

மகரிஷி கணாதரின் முக்கிய ஆய்வு, ரசவாதம் (alchemy) சார்ந்ததே ஆகும். வாழும் அனைத்து உயிர்களும் நீர், நெருப்பு, மண், காற்று, ஆகாச வெளி ஆகிய ஐந்து பஞ்ச பூதங்களும் கொண்டிருப்பதாக அவர் கருதினார். தாவரங்களுக்கு நீர் மட்டும் உண்டு. பூச்சிகளுக்கு நீரும், நெருப்பும் உண்டு. பறவைகளுக்கு நீர், நெருப்பு, மண், மற்றும் காற்று உண்டு. இவை எல்லாவற்றிற்கும் மேம்பட்ட மனிதருக்கு பஞ்ச பூதங்களும் உண்டு. இவை தவிர, காலம், வெளி, மனம் ஆகியவற்றை பகுத்தறியும் உணர்வும் உண்டு.

புவி ஈர்ப்பு விசையையும் கண்டறிந்தார் கணாதர்

பூமியை நோக்கி பொருட்கள் கீழே விழுவதற்கு காரணம் 'குருத்வம்' (gravity) என்று அவர் கருதினார். வேதி மாற்றத்துக்கு காரணம் வெப்பமே. ஒரு பொருளை சூடுபடுத்தினால், அது பௌதீக மாற்றமடைகிறது. வெப்பத்தினால் மாங்காய் பழுக்கிறது. வெப்பத்தினால், மண் சட்டி சுடப்பட்டு கருப்பாகிறது. வெப்பத்தினால் நீர் கொதிக்கிறது. எனவே, எந்த வேதி மாற்றத்திற்கும் காரணம் வெப்பமே என்று கணாதர் கூறினார்.

கணாதரை ஏற்றுக்கொள்ளும் அயல் நாட்டு பேராசிரியர்கள் :

கணாதரின் அணுக்கொள்கை தனித்து உருவாக்கப்பட்டது. கிரேக்க- ரோமானிய விஞ்ஞான கோட்பாடுகள் கண்டுபிடிக்கப்படும் முன்பே, இந்தியாவில் நமது பழங்கால மூதாதையர்களால் அது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது உருவாக்கப்பட்ட காலத்தை வைத்து பார்க்கும் போது, அது கணாதரின் வாழ்க்கைக்காலத்தை தொடுகிறது. அணுவைக்குறித்த இந்திய தேற்றங்கள் யாவும் அருவமாக இருக்கிறது. அவை, பெரும்பாலும், தர்க்க ரீதியாக, மெய்யியலோடு பிணைக்கப்பட்டுள்ளது. அது பரிசோதனைகளின் அடிப்படையில் தனித்துவ அனுபவமாக அமையவில்லை. "இந்திய தேற்றங்கள், அனுபவத்தால் தெரியப்படுகிறவைகளாக அமையாமல், இவ்வுலகின் பௌதீக அமைப்பின் கற்பிதமான விளக்கங்களாக அமைகிறது. இருப்பினும், அவை நவீன பௌதீகத்தின் கண்டுபிடிப்புகளோடு பெரிதும் ஒத்துப்போகிறது" என்று ஆஸ்திரேலியாவில் இருக்கும் இந்தியவியல் பேராசிரியர் பாஷம் கூறுகிறார்.
"கணாதரின் சூத்திரங்கள் யாவையும் ஆராய்ந்தால், அவை அதற்குப்பின் வந்த கிரேக்க தத்துவவியலாளர்களான லூசிபஸ் மற்றும் டெமாக்ரட்டிஸ் ஆகியோரின் தேற்றங்களை விட மிகவும் மேம்பட்டதாக உள்ளது" என்று எழுத்தாளரான திலீப் எம். சால்வி கருதுகிறார்.

அணுவும், **ஆத்மாவும்**

வார்த்தைப்பூர்வமாக, அணுவுக்கும், ஆத்மாவுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு பொருளின் வடிவம் மாறினாலும், ஆத்துமா மாறாமல், எல்லா சேதன, அசேதன வஸ்துக்களிலும் உள்ளது. ஆதலால், அது ஆத்துமா என்று அழைக்கப்பட்டது. அவ்வண்ணமே, நவீன விஞ்ஞானமும், எல்லா பொருட்களிலும் இருக்கிற பொருளை அணு என்று அழைத்தது. அணு, ஆத்துமா என்ற இரு வார்த்தைகளும் நெருங்கிய ஒலிக்குறிப்புகள் கொண்டவை.

இந்த இந்திய தேற்றங்கள் எல்லாமே, அருவமான, தத்துவார்த்தமாக இருந்ததால், இவை, விஞ்ஞான கோட்பாடுகள் என்று கருதப்படவில்லை. அணுவைக்குறித்த விளக்கங்களை, இயற்பியல் மற்றும் வேதியியல் ரீதியாக, புதிய கண்டுபிடிப்புகள் வாயிலாக மிகத்துல்லியமாக விளக்கிய பின்பு தான், அணுவைக்குறித்த கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“அணுக்கள் ஒன்று சேர்ந்து கூட்டுப்பொருட்களாகின்றன” என்றும், “அதுவே எல்லா வஸ்துக்களுமாக ஆகின்றன” என்றும், அந்த வஸ்துக்களைக்கண் கொண்டு காணலாம் என்றும், அணுவை கண்ணால் காண முடியாது என்றும், நியாய, வைசேஷிக சூத்திரப்படி வந்த கருத்தியலாளர்கள் கூறினார்கள்.

இந்த வேதியியல் வினைகள் எல்லாமே, எல்லா வஸ்துக்களும் எதிலிருந்து வந்ததோ, அந்த பரமாத்துமாவின் எண்ணப்படி நடப்பதாக நமது முன்னோர்கள் கருதினர். இதைத்தான் நவீன விஞ்ஞானமும், பெருவெடிப்புக்கோட்பாடு (Big Bang theory) என்று கூறுகிறது. இன்றைய நவீன விஞ்ஞானத்தின்படி, பெருவெடிப்புக்கு முன்னால், இந்த பிரபஞ்சம், ஓர் அணுவின் எலெக்ட்ரான் அளவே இருந்தது என்று சொல்லப்படுகிறது. அதாவது, 1/10000000000000 cms.

நம்முடைய ரிஷிகள், ஆன்மீக ரீதியாக இதற்கு பொருள் தந்தனர். அதாவது பரமாத்மா என்பது அனந்தமாக இரு விதங்களில் உள்ளது. அதுவே மீச்சிறு பொருளாகவும், அறிதற்கரிய மிகப்பெரிய பொருளாகவும் உள்ளது. மாணிக்கவாசகர் தனது திருப்பள்ளியெழுச்சியில் "யாவரும் அறிவறியாய் எமக்கெளியாய்" என்பார். யாவரும் அறிய முடியாதபடி பரம்பொருள் உள்ளது. விஞ்ஞானம் சொல்லும் அணுவும் அவ்வாறே.

நவீன விஞ்ஞானத்தில் சொல்லப்படுவதற்கு 2600 ஆண்டுகளுக்கு முன்பே, அணுக்கொள்கையை முதன் முதலாய் எடுத்துரைத்த கணாத மகரிஷி ஓர் அதிசயமான பாரத மகான். சரி, இதே கணாதரின் கொள்கை, அவருக்கு பின்னாளில் எவ்வாறு சொல்லப்பட்டது என்றும் நாம் காண்போம்.

பொ. **சகா**. 20-**ம் நூற்றாண்டின் கண்டுபிடிப்பே அணு ஆயுதம்** :

இரண்டாவது உலகப்போர் காலத்தில் தான் அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் எழுபது ஆண்டு காலமாகத்தான் அணுசக்திக் கொள்கையை உலகம் அறியும்.

ஆனால், இந்த அணுகுண்டுக் கொள்கையை திருவள்ளுவ மாலையில் காணும் போது, அது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. திருக்குறளின் பெருமையை உலகம் அறியும். குறுகிய அடிகளில் (குறள்) மிகப்பெரிய கருத்துகளைப் புகுத்தியது வள்ளுவனின் திறமையாகும்.

இதை விளக்க வந்த இடைக்காடர் என்ற புலவர்,

“கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி
குறுகத் தரித்த குறள்”

என்று பாடினார்**.** திருவள்ளுவ மாலையின் 54- ஆவது பாடலை இவர் இயற்றியுள்ளார். இதையே ஔவையார் "கடுகு**'** என்ற சொல்லிற்கு பதிலாக **"**அணு" என்ற சொல்லை மாற்றி

'அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்' என்றார்.



கம்பனின் காவியம் சொல்லும் அணுக்கொள்கை :

கம்பனின் அழியாப்புகழ் கொண்ட இராமாயணத்தில், அணுவைப்பற்றிய குறிப்பு சொல்லப்பட்டுள்ளது. நமக்கெல்லாம் மிகவும் பரிச்சயமான இரண்யன் - பிரகலாதன் கதை தெரியும். இந்த தொன்மத்தைப்பற்றிய விவரிப்பு யுத்த காண்டத்தில் வருகிறது.

தனது நாமத்தைப்போற்றாமல், நாராயணனின் நாமத்தைச்சொல்லும் தனது மகன் பிரகலாதனின் மேல் இரணியனுக்கு கோபம் வருகிறது. இரணியன் தன் மகன் பிரகலாதனுக்கு சொல்லில் அடங்காத சித்திரவதைகளைச்செய்கிறான். மகனுக்கு மிகுந்த கொடுமைகள் செய்தும் அவன் அழியாததைக் கண்டு, நானே கொல்வேன் என்று புறப்படும் தந்தையிடம் பிரகலாதன் சொல்வது :

சாணிலும் உளன் ; ஓர் தன்மை, அணுவினைச் சத கூறு இட்ட
கோணினும் உளன்; மா மேருக் குன்றினும் உளன் ; இந் நின்ற

தூணினும் உளன் ; நீ சொன்ன சொல்லினும் உளன் ; இத் தன்மை
காணுதி விரைவின் ''என்றான் ; ''நன்று ''எனக் கனகன் நக்கான்.

-- இராமாவதாரம், யுத்த காண்டம், இரணியன் வதைப்படலம்.

'எங்கே இருக்கிறான் உன் நாராயணன்?' என்று பிரகலாதனிடம் கேட்கிறான் இரண்யன். 'அவன் எங்கும் நிறைந்து இருக்கிறான்' என்று பிரகலாதன் பதிலளிக்கிறான். இதனை ராமாயணத்தில் சொல்ல வந்த கம்பர், 'சாணிலும் உளன், ஒரு தன்மை அணுவினை சத கூறிட்ட கோணிலும் உளன்!'என்கிறார். அணுவை நூறு கூறாகப் பிளந்தால் உண்டாகும் துகளுக்கு 'கோண்' என்று பெயர். இதையே 'தூணிலும் இருப்பான்! துரும்பிலும் இருப்பான்' என்று சொல்வர். 'கோண்' என்பது துரும்பை விட மிக மிக நுட்பமானது. அணுவை நாங்கள் தான் கண்டு பிடித்தோம் என்று எந்த வெளிநாட்டாருக்கும் சொல்லி கொள்ள உரிமையில்லை. அணுவில் நூறில் ஒரு பகுதியே கோண் என்று நமக்கெல்லாம் அறிவித்தார் கம்பர். கம்பரது காலம் பொ. சகா. 1180-1250 ஆகும். அதாவது பன்னிரண்டு மற்றும் பதிமூன்றாம் நூற்றாண்டுகளாகும்.


ஞானமே வடிவாக எத்தனையோ மகான்கள், மகரிஷிகள், ஞானிகள் அவதரித்து மிகப்பெரிய ஞானத்தை நமக்குச்சொல்லி விட்டு சென்றுள்ளனர். அவர்களை நாம் நினைந்து போற்றுவோம்.

இணைய தள குறிப்புகள் :

https://www.myindiamyglory.com/2017/10/07/maharishi-kanad-discovered-atomic-theory-2600-years-ago-not-dalton/?fbclid=IwAR2Ts_mkXDMFFB6ant_l9e2Gc935rh5p_1rbQNxymdJQaFPlHO-2-lO8fJU

நூல் விமர்சனம்

"கண்டு கொள்ளுவோம் கழகங்களை" மற்றும் "**திராவிட மாயை - ஒரு பார்வை**" இந்த இரண்டு புத்தகங்களும் வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள். ஆனால் இரண்டின் நோக்கமும் ஒன்று தான். திராவிடக் கட்சிகளின் மூதாதையர் வரலாறு, அக்கட்சிகளின் நிலையில்லாத கொள்கைக் கோட்பாடு போன்றவற்றின் போலித்தனம் ஆகியவற்றை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுகின்றன இரண்டுமே.






"கண்டு கொள்ளுவோம் கழகங்களை" என்ற கட்டுரைத் தொடர் மூலம் தியாகி நெல்லை ஜெபமணி அவர்கள் எண்பதுகளில் "துக்ளக்" இதழில் எழுதி வந்தார். அவரது மகனும், 'அகடவிகட அக்கப்போர்' என்ற அரசியல் பத்திரிகையின் ஆசிரியருமான ஜெ.மோகன்ராஜ் அவர்கள் இந்தக் கட்டுரைகளைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

புதிய தலைமுறையினருக்குப் பல புதிய விஷயங்களைத் தரும் விதமாகவும், எண்பதுகளில் துக்ளக் இதழில் ஜெபமணியின் கட்டுரைகள் படித்து வந்த எம்மைப் போன்ற தலைமுறையினருக்கு மீண்டும் நினைவூட்டும் விதமாகவும் அமைந்துள்ளன இந்தக் கட்டுரைகள்.

பெயர் : **"கண்டு கொள்ளுவோம் கழகங்களை"**
ஆசிரியர் : தியாகி **நெல்லை ஜெபமணி**
பதிப்பு : முத்துமாலையம்மன் பதிப்பகம், கிழக்கு அபிராமபுரம், சென்னை-4
பதிப்பசிரியர் : ஜெ.மோகன்ராஜ்
கிடைக்குமிடம் : அகடவிகட அக்கப்போர் அலுவலகம், தணிகாசலம் தெரு, (ஹிந்தி பிரச்சார சபா எதிரில்), தி.நகர், சென்னை-600 017
பக்கங்கள் : 254 **விலை** : **Rs.100**

தலை சுற்ற வைக்கும் ஒரு தமிழ்ப்படைப்பு

பிதிரா



நூலே ஓர் பிதிரா

பிதிரா ஓர் வஜ்ரொலி முத்திரை/ புரிமுறுக்குங் கயிறுபோல் சடைசடையாய் முனிதிரியும் காட்டிலோர் புற்று மண்ணால் பூச்சி கட்டிய அறைகளுக்குள் கபாலம் திறந்த உச்சி வெளியில் கண் முளைத்து உடல் விரிந்தலையும் போகர் கட்டிவைத்த மூலிகை தழைத்துவரப் பறித்தநாழிகையில் கல்லைப்பேசவைக்கும் சொல்லைப் பூட்டி வைத்த நாக்குமேல் நாக்கிலிருந்து நானாவித ஜீவகோடி நாக்கு நுனி தலையேறிக் குரல்வளை சுழலும் சிரசுகளின் வாக்கு ஒலிகளாய் பிடரி வழிபாயும் அருவி முள்ளெலும்பு மூல நாடியில் ஊர்ந்து போய் இப்பிரதி சரீர மண் நக்கி தரைவழி நெளிந்தோடி எல்லாத் துளைகளிலும் பரவிவரப் பார்த்த உகாரமெனும் காகத்தைக் கைதட்டிக் கூப்பிட்டேன்.

கோணங்கி எழுதிய “பிதிரா” என்ற புதினத்துக்கு ஓர் இதழில் வெளிவந்துள்ள விளம்பரம் தான் இது. நூலைப்பற்றிய விளம்பர அறிமுகமே இந்த லட்சணத்தில் (ஒருவருக்கும் புரியாதபடி) இருந்தால், அந்தப் புதினம் எந்த லட்சணத்தில் இருக்கும் என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. உங்கள் ஊரில் இருக்கும் நூலகத்தில் இந்த நூல் கிடைத்தால், வாசித்துப்பாருங்கள்.

முன் எச்சரிக்கை : இரண்டு பக்கம் வாசித்ததும், உங்களுக்கு மூர்ச்சை ஏற்பட்டு, மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

பத்மா குருவின் கவியுலகம்

கனி தரும்...

நல்ல காற்று தரும்...

மழை தரும்....

மணமிக்க மலர் தரும்...

மண்ணில் வளம் தரும்...

பெரு வனமும் தரும்...

பறவைக்கு வீடு தரும்...

பெரும் படைக்கும் நிழல் தரும்....

வாசமிகு திரவியம் தரும்....

இறந்தும் பல கலைப்பொருள் தரும்....

முள்ளாய் வயல் வேலி தரும் ....

என்னை....

யாருடன் ஒப்பிடுகிறார் வள்ளுவர்?

ஆறறிவு மானிடரே கூறுவீரோ ...

ஓரறிவு உயிர் எனக்கு ?

-- இப்படிக்கு மரம் !

கொக்கோகம்

துளித்துளியாய்ச் சேர்த்த

தூவெண் பூத்தேன்

உனதன்பு!

நீளும் இரவு

குறுக வைக்கிறது

உன் வரவு!

அன்பின் நிமித்தம்.

வெட்ட வெளியில்

இரண்டு மரங்கள் நிற்கின்றன.

ஒன்று ஆல். பிறிதொன்று வேம்பு

ஆல் உயரமாகவும்,

வேம்பு சிறிதாகவும் நிற்கின்றன.

இரண்டைத்தவிர வேறொன்றுமில்லை

இரண்டும் வேறு வேறு தான்.

ஆனாலும், அன்பின் நிமித்தமாய்

அருகருகே துளிர்த்திருக்கின்றன.

இரண்டு மரங்கள்

இங்கு தனித்திருக்கின்றன.

ஒன்று மட்டும் தனிமையில் இருப்பது ஒரு சுகம்

இரண்டும் தனிமையில் நிற்பது அபூர்வம்

காதல் குருவிகள் வந்தமர்கிறது வேம்பில்

ஆல் வேம்பைப்பார்த்து தலையசைக்கிறது

வேம்போ சில இலைகளை உதிர்க்கின்றது

தலையசைப்பிலும் உதிர்த்தலிலும் தானே

இயங்குகிறது யாவும்.

-- குமரேசன் கிருஷ்ணன்.

செண்பகராஜனின் புதிய கவிதை நூல்....



இந்நூல் கவிஞர் செண்பகராஜன் தன்னைப் பெண்ணாக உருவகம் செய்து எழுதப்பட்ட வித்தியாசமான நூல். இது அவரது 12 -வது நூல். இந்த நூல் சலுகை விலையில் கிடைக்கிறது. ரூ.80 + ரூ.40 (தபால் செலவு) = ரூ.120 /-

நூலை வாங்குவதற்கு ஜீபே (Gpay) செய்யவும். எண் : **94880 01251**

செண்பகராஜனின் படைப்புகள்

உன் இதயச் சிரிப்பில் சிக்கி விட்டேன்.

உன் முத்த சாவியால்

எனக்கு விடுதலை கொடு !

I love u

சொல்ல வெட்கப்பட்டு

உன் கண்களைப் பார்த்து

ஐ லவ் Eyes என்றேன்

பார்வை சுழிப்பில் உன் கண்கள்

என்னை கபளீகரம் செய்தபடி.

உன் கழுத்தில் தடம் பதிக்க

என் உதடுகள் காத்திருக்கிறது

கிடைக்குமா **E-PASS ?**

காதலில் நான் சிக்குண்டேன்

மீட்டெடுத்து தருமா உன் விழி மருத்து?

காதல் எனக்கு போதி மரமல்ல

போதை வரம்.

பத்த வச்சிடுச்சு காதல்.

அணைக்க யார் வருவார்கள்?

கவிழ்ந்தாலும் அவள் பார்வையில்

நான் டைட்டானிக் ஆனேன்

வரலாற்றில் குட் நைட் சொன்ன

உன் வாயால் ஸ்வீட் நைட் சொல்லச் செய்வேன்

கிடைக்குமா இரவு நேர தளர்வு ?

இரவை அழகாக்கினாய்

உன் அழகில் நான் பகலானேன்

முத்தம் தர என் உதடுகள் தயக்கம்

மொத்தமாய்த் தர விருப்பம்.

செண்பகராஜனின் கவிதை நூல் வெளியீட்டு விழா

கோவை வசந்த வாசல் கவி மன்றம் மதிப்புறு முனைவர் "நீல நிலா" செண்பகராஜன் எழுதியுள்ள "மீன் விழியில் உருளும் கவிகள்" நூல் வெளியீட்டு விழாவை கோவை உற்பத்தித்

திறன் குழு கட்டிடத்தில் 09 - 06 - 2024 ஞாயிறு அன்று நடத்தியது. விழாவிற்கு மன்றத் தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். மீன் விழியில் உருளும் கவிகள் நூலை தாழம்பூ இதழாசிரியர் கோவிந்த ராசன் வெளியீட, வெற்றி மொழி வெளியீட்டகம் பதிப்பாளர் தமிழ் தாசன் மற்றும் நிலா இதழாசிரியர் மானூர் புகழேந்தி பெற்றுக் கொண்டார்கள். நூலை வாழ்த்தி மருத்துவர் குண சுந்தரி, எழுத்தாளர் முகில் தினகரன் மற்றும் மதுரை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் தீபா ஆகியோர் பேசினார்கள். நூலாசிரியர் "நீல நிலா" செண்பக ராஜன் ஏற்புரை வழங்கினார். விழாவில் 60க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டார்கள். நிறைவாக மன்றச் செயலாளர் நா.கி.பிரசாத் நன்றி கூறினார்.





Shakespeare's Desk

"ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்" புத்தக நிறுவனத்தின் வெளியீடுகள்

1. கான்டெர்பரி கதைகள் –(ஜெப்ரி சாஸர்) - மொழிபெயர்ப்பு **ரூ. 100 -00**

2. முத்தா ---- (சிறுகதைகள்) -- **ரூ. 80-00**

3. எலியாவின் கட்டுரைகள் --(சார்லஸ் லாம்ப்) – (மொழிபெயர்ப்பு) **ரூ. 150 -00**

4. நகைச்சுவைக்கதைகள் --(ஆர். கே. நாராயண் , ஸ்டீபன் லீகாக்)
(மொழிபெயர்ப்பு) **ரூ. 150-00**

5. டைனோசர் ஆயிரம் சூழ வலஞ்செய்து ...(சிறுகதைகள்) **ரூ. 150 -00**

6. ஆண்டாளம்மா தேசம் (கட்டுரைகள்) ..... **ரூ. 150 - 00**

7 மோசஸ் மாணிக்கவாசகம் பிள்ளையவர்களின் ரெண்டு
புத்திரிகளின் மகாத்மியம்... (குறுநாவல்கள்) ..... **ரூ. 150 -00**

8. கதவு எண். 43, ரயில்வே பீடர் ரோடு --(சிறுகதைகள்)-- **ரூ. 150 – 00**

9. சில சுகமான நாட்கள் --(முழு நீள தமிழ்த்திரைக்கதை) -- **ரூ. 150 –00**

10. Srivilliputtur : *Ruminations of a Rambler* (Essays) **– Rs. 150-00**

11. *Another Winter Evening and hot tea cups* (English verses) – **Rs. 150-00**

12. Nammazhwar *: The Saint and his Science (* A treatise on *Thiruvaimozhi*) - Available on www.amazon.in

13. *On the Substitution of the Roman for the Indian Characters*
by Rev. Dr Robert Caldwell Ed. S. Ramesh ... *on print*

14. *Narkarunai tyanamalai* by Rev. Dr Robert Caldwell, Ed. S. Ramesh
.... *on print*

15. *Records of the Early History of the Tinnevelly Mission, etc .*
by Rev. Dr Robert Caldwell Ed. S. Ramesh ... *on print*

16. 16 - முதல் 19 -ம் நூற்றாண்டு வரையிலான ஆங்கிலக்கவிதைகள் - (மொழிபெயர்ப்பு[ )
ரூ. 150 – 00

17. தவறான தமிழ்த்தாய் வாழ்த்து-- (கட்டுரைகள்) **ரூ. 150 –00**

18. இலக்கிய நெறி :: விமர்சன நெறிமுறைகள்-

(பிளாட்டோ முதல் க்ளியாந்த் ப்ரூக்ஸ் வரை) ***....*** ரூ. **150-00**

19. *Lectures on the Tinnevelly Missions – Descriptive of the Field, the Work and the Results & other rare works by Rev Dr Robert Caldwell (Reprint).*

Rs. 200-00

20. கரிசனம் -- --(சிறுகதைகள்) ரூ. **200 – 00**

21. மொழிபெயர்ப்புக்கவிதைகள் –(எமிலி டிக்கின்சன், டி. எச். லாரன்ஸ்) ரூ.**120 -**

22. இந்திய வரலாறு – பாகம் – 1 (பொய்யும் மெய்யும்) ரூ**. 300-00**

புத்தகங்களின் தேவைக்குத் தொடர்பு கொள்ள :

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்
“ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்”
எண் 33 தெற்கு ரத வீதி
ஸ்ரீவில்லிபுத்தூர் அ. கு. 626 125
விருதுநகர் மாவட்டம். அலை பேசி : 90805 51905